**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23.06.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மை ப் பல்கலைக்கழகத்தில்தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மானிய திட்டங்கள் பற்றிய ஒருநாள் கருத்தரங்கம்

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மானிய திட்டங்கள் பற்றிய ஒருநாள் கருத்தரங்கம் 22.06.2023 அன்று தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் தலைமை தாங்கி தேசிய தோட்டக்கலை வாரிய திட்டங்கள் பற்றிய இதழ்களை வெளியிட்டார். மேலும் அவர்கள் பேசியதாவது:

- தோட்டக்கலைப் பயிர்களை திறந்த வெளியில் பயிரிடச் செய்யும் முறை மூலம் (Open Field Cultivation) வணிக ரீதியில் விவசாயிகளை ஊக்குவிப்பது முதல் பிரிவு. இத்திட்டத்தில் இணையும் விவசாயிகள் குறைந்தது 5 ஏக்கருக்கு மேல் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும். இதில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மொத்த திட்ட மதிப்பில் 40 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இதில் வாழை தென்னை எலுமிச்சை, இலந்தை, நெல்லி, திராட்சை, அத்தி, சீதாபழம், கொய்யா, மா, பப்பாளி, ஆப்பிள் ஏப்ரிகாட், அன்னாசி, ஆலிவ், ஆரஞ்சு, பீச்பேரி, பிலம்ஸ், மாதுளை, சாப்போட்டா, ஸ்டாபெரி, வால்நட், பலா, முந்திரி, கிவி, பேரிச்சை, கருப்புமிளகு, இலவங்கபட்டை சிட்ரோனெல்லர், ஜெரானியம், ஸ்டீவியா, பால்மரோசாசெலரி மற்றும் புளி போன்ற பயிர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.
- இதில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அதன் திட்ட மதிப்பீட்டில் அதிகளவாக 30 லட்சம் ருபாய் வரை மானியம் கிடைக்கும். இப்படியான திட்டத்தில் இணைவது சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு கடனுடன் இணைந்த இறுதி மானியம் கிடைக்கும் என்பதையும் உறுதியாகச் சொல்லலாம்.

- இரண்டாவது பிரிவில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பசுமைக்குடில் (Poly House) முறையில் உயர் மதிப்பிலான தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்யும் திட்டமாகும். இதில் குடைமிளகாய், வெள்ளரி, தக்காளி மற்றும் கொய் மலர்களான ரோஜா, லில்லிப், சாமந்தி, கார்னேசன் ஜெர்பரா, ஆந்தூரியம் ஆர்குட் உள்ளிட்ட பூ சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் அரசு மானியம் வழங்குகிறது. இதில் குறைந்தது 2500 சதுர மீட்டருக்கு மேல் பயிர் சாகுபடி செய்ய வேண்டும். இது போன்ற திட்டங்களுக்கு 50 விழுக்காடு மானியம் மற்றும் அதிகளவான 36 லட்சம் ருபாய் வரை ஒரு திட்டத்திற்கு மானியமாகக் கிடைக்கும் என்றும் அதனால் விவசாய பொருட்களை அனைவரும் பயன் பெருமாறு கேட்டுக் கொண்டார்
- தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் முதல்வர் திருமதி P. ஜரின்வேதமணி வரவேற்புரை ஆற்றி தேசிய தோட்டக்கலை வாரிய திட்டத்தின் மூலம் பயன் பெருமாறு விவசாயிகளிடம் கேட்டுக் கொண்டார்
- தேசிய தோட்டக்கலை வாரியத்தின் துணை இயக்குநர் பா.ராஜா அவர்கள் தேசிய தோட்டக்கலை வாரிய திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

புதிய வழிகாட்டு நெறிமுறைகள் மார்ச் 15 2023 முதல் தொடங்கப்பட்டுள்ளது. இதில் இனிமேல் முதன்மை ஒப்புதல் பெறத்தேவை இல்லை. 15.03.2023க்கு முன்பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கனவே உள்ள முறைப்படி பின்பற்றப்படும். இனிமேல் நேரடியாக விவசாயிகள் அனுமதிச் சான்றுக்கு (Grant of Clearance) இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். அனுமதி சான்று பெற கீழ்கண்ட ஆவணங்கள் சமர்பிக்க வேண்டும்:

1. விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report)
2. வங்கி அனுமதி கடிதம் (Bank Sanction Letter)
3. வங்கி மதிப்பீட்டு குறிப்பு (Bank Appraisal Note)
4. நில ஆவணம் ( project Land Document )

அதன் பின்னர் வேளாண்மை இணை இயக்குநர் திருமதி K. முத்துலட்சுமி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் திரு. M. ஷபி அகமது, தோட்டக்கலை துணைஇயக்குநர் திருமதி M.புவனேஸ்வரி மற்றும் நபார்டு மேலாளர் திரு. திருமலை ராவ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இறுதியாக திருமதி ஹரிபிரியா நன்றியுரை ஆற்றினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***